# 6 இலாபநோக்கற்ற நிறுவன அமைப்புக்களின் கணக்குகள்






இவ்வத்தியாயத்தைக் கற்பதன் மூலம்

- ➢ இலாப நோக்கற்ற அமைப்புக்கள
- ➢ பிரதான வருமானமான அங்கத்துவக் கட்டணம்
- ➢ இலாப நோக்கற்ற அமைப்புக்களின் கணக்குகள்
    - கொள்ளல் கொடுத்தல் கணக்கு
    - வருமானச் செலவுக் கணக்கு

ஆகியன தொடர்பான தேர்ச்சிகளைப் பெற்றுக் கொள்வீர்கள்.

## 6. இலாப நோக்கற்ற நிறுவனங்கள்

பாணந்துறை மத்திய கல்லூரியின் பழைய மாணவர்கள் பழைய மாணவர் சங்கத்தை நிறுவுவதற்காகக் கல்லூரியில் ஒன்றுகூடினர். இவ் ஒன்று கூடலில் ஆராயப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

- பாடசாலையின் பௌதிக வளங்களை அபிவிருத்தி செய்தல்
- திறமையுள்ள மாணவர்களை மேலும் ஊக்குவிக்கும் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
- பொருளாதாரக் குறைபாடுடைய மாணவர்களுக்கு கற்றலைத் தொடர உதவி வழங்கல்
- விளையாட்டுத் துறையை மேம்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குதல்

கல்வி கற்கும் காலத்தில் பாடசாலையில் பல்வேறு பதவிகளை வகித்த விஜயரட்ணம், செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். சங்கத்தின் ஏனைய பதவிகளுக்கு மிகப் பொருத்தமானவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆனால், பொருளாளர் பதவிக்கு வைத்தியரான ஜோசப்பின் பெயரும், கணக்காளரான நியாஸினதும் பெயர்கள் முன்மொழியப்பட்டன. பொருளாளர் பதவிக்கு இவர்களுள் ஒருவரைத் தெரிந்தெடுப்பதற்காகத் தேர்தலை நடத்துவது எனத் தீர்மானிக்கப் பட்டது. இச்சந்தர்ப்பத்தில் சபையில் எழுந்து நின்று வைத்தியர் ஜோசப் ஆற்றிய உரை அனைவரினதும் பாராட்டுக்குள்ளானது.

''என்னை இப்பதவிக்கு முன்மொழிந்தமைக்கு மிகவும் நன்றிகள். எனக்கு இச் சந்தர்ப்பத்தில் எங்கள் பாடசாலைக் காலம் நினைவுக்கு வருகிறது. நாம் சாதாரண தரத்தில் வணிகக் கல்வியை அதி விருப்புடன் கற்றது ஞாபகத்தில் இருக்கிறது.'' அப்போதிருந்த வணிக மாணவர் சங்கத்தில் நாம் இருவரும் நிர்வாக உறுப்பினர்களாக செயற்பட்டோம். அன்றும் பொருளாளராக நியாஸ் இருந்தார். அப்போது எமது சங்கத்தின் செயற்பாடுகள் இப்பிரதேசம் முழுவதும் பிரபலமாகி இருந்தது. எமது சங்கத்தின் நிதியை அதிகரித்துக் கொள்ள நாம் விற்பனைச் சந்தைகளையும், பல்வேறு நிகழ்ச்சிகளையும் நடத்தினோம். இவை அனைத்தினதும் கணக்குகளை நியாஸே ஒழுங்காகப் பேணினார். இந் நடவடிக்கைகள் சீராகவும் பிழையற்ற தன்மையுடையதாகவும் இருந்ததாக எமது வணிக ஆசிரியர், மெச்சியது எனக்கு நினைவில் இருக்கிறது. எனவே இப்பதவிக்கு நியாஸே மிகவும் பொருத்தமானவர் என்னைப் பிரேரித்தமைக்கு மீண்டும் என் நன்றியைத் தெரிவித்து, என் பெயரை நான் மீளப்பெறுகிறேன்''

மேற்கூறிய பகுதியை வாசித்த உங்களுக்கு, சமூக நலனோம்பு சேவையை நோக்காகக் கொண்ட இலாப நோக்கற்ற நிறுவனங்களும் கணக்கீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன என்பது புரிந்திருக்கும். இவ்வத்தியாயத்தில் இவ்வகை நிறுவனங்களின் கணக்கீட்டு நடவடிக்கைகள் தொடர்பாகக் கவனம் செலுத்துவோம்.

## அறிமுகம்

மனிதத் தேவைகளையும், விருப்பங்களையும் நிறைவேற்றுவதற்காகச் செயற்படும் சில ஒழுங்கமைப்புக்கள் இலாபநோக்கமல்லாது, சமூக நலன்களை நிறைவேற்றும் சேவை நோக்கத்தைக் கொண்டுள்ளன. இவை இலாப நோக்கமற்ற நிறுவனங்கள் எனப்படும்.

இவ்வமைப்புக்கள் பல்வேறு மூலங்களிலிருந்து பணத்தைத் திரட்டிக் கொள்வதோடு தமது நடவடிக்கைகளுக்காகப் பணத்தை பயன்படுத்தவும் செய்கின்றன. இவ்வமைப்புகளின் நிர்வாகத்தில் சகல உறுப்பினர்களும் ஈடுபட முடியாது. எனவே, உறுப்பினர்களினதும் ஏனைய கட்சியினரதும் தெரியப்படுத்தலுக்காக சங்கத்தின் நிதிச் செயற்பாடுகள் கணக்கீட்டு முறைமைக்கு உட்படுத்தல் அவசியம்.

இவ் அத்தியாயத்தில் இலாப நோக்கற்ற நிறுவன அமைப்புக்களின் பொருளாதார நடவடிக்கைகளைக் கணக்குகளில் பதிவது பற்றிக் கற்கும்போது பின்வரும் அடிப்படை அம்சங்களில் உங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

- உறுப்பினர் கட்டணங்கள்
- ஆயுள் அங்கத்துவக் கட்டணம்
- கொள்ளல் கொடுத்தற் கணக்கு
- வருமானங்களும் செலவுகளும்
- வருமான செலவுக் கணக்கு
- திரண்ட நிதி
- மேலதிகம் / மிகை
- பற்றாக்குறை



நலன்புரி சங்கம் ஒன்றினால் நடைமுறைப்படுத்தப்பட்ட இரத்ததானம்



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## 6.1 இலாப நோக்கற்ற நிறுவனங்களின் நடவடிக்கைகள்

உங்கள் பாடசாலையில் காணப்படும் பல்வேறு இலாபநோக்கற்ற அமைப்புக்களைப் பற்றிச் சிந்தியுங்கள். பௌத்த மன்றம், இந்து மாமன்றம், முஸ்லிம் மஜ்லிஸ், தமிழ் இலக்கிய மன்றம், கிறிஸ்தவ மன்றம், வணிக மன்றம் என்பன சங்க அமைப்புக்களுக்கான உதாரணங்களாகும். இவ்வமைப் புக்களின் பிரதான குறிக்கோள்களாவன,

★ அங்கத்தவர்களின் முன்னேற்றமும் நலன்களும்

★ சமூகத் தொடர்புகளை விருத்தி செய்தல்

என்பனவாகும். மேலும் நீங்கள் வாழும் பிரதேசத்தில் செயற்படும் மரண நலன் புரிச்சங்கம், தொழிற் சங்கம், சமயச் சங்கம், விளையாட்டுச் சங்கம் என்பன இவ்வமைப்புகளுக்குமான சில உதாரணங்களாகும். இவ்வமைப்புக்களின் நோக்கம் இலாபம் உழைப்பதல்லவெனினும் பல்வேறு பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன. அவையாவன

★ அங்கத்துவப் பணம் திரட்டல்


★ பல்வேறு நபர்கள் அல்லது அமைப்புக்களிலிருந்து நன்கொடை பெறல்.

★ சிற்றுண்டிச்சாலைகளை நடாத்திச் செல்லல்.

★ கொடி விற்பனை, களியாட்ட நிகழ்ச்சிகள் போன்றவை மூலம் பணம் திரட்டல்.

★ அங்கத்தவர்களுக்குப் பொருளாதார உதவி செய்தல்

மேற்காட்டிய உதாரணங்களுக்கமைய இவ்வமைப்புகள் ஏதாவது ஒரு முறையில் வருமானம் உழைத்துச் செலவு செய்கின்றன. எனவே இந்நிதிச் செயற்பாடுகளை அங்கத்தவர்களுக்குத் தெரியப்படுத்த கணக்கீட்டுத் தொழிற்பாடொன்று அவசியமாகும்.



**செயற்பாடு**

1. நீங்கள் வாழும் பிரதேசத்தில் செயற்படும் நலன்புரிச் சங்கங்கள் சிலவற்றைக் குறிப்பிட்டு அவற்றின் செயற்பாடுகள் தொடர்பாக அறிக்கையொன்றைத் தயாரியுங்கள்.
   - ii) அச்சங்கங்கள் நிதியைப் பெற்றுக்கொள்ளும் முறைகள் தொடர்பாகக் கேட்டறியுங்கள்.
   - iii) இந்நிதிப் பெறுகையை அதிகரிப்பதற்கான வழிமுறைகளைப் பற்றிய ஆலோசனைகளை முன்வையுங்கள்.

2) i) உங்கள் பாடசாலையில் உருவாக்கப்பட்டுள்ள பல்வேறு சங்கங்கள் பற்றிய தகவல்களைத் திரட்டி அவற்றினால் மேற்கொள்ளப்படும் நலன்புரி வேலைத்திட்டம் பற்றிய அட்டவணையொன்றைத் தயாரியுங்கள்.

iv) பாடசாலையின் சங்கங்கள் தொடர்பாக அறிக்கையொன்றைத் தயாரித்து பாடசாலைச் சுவரொட்டியில் காட்சிப்படுத்துங்கள்.

## 6.2 அங்கத்துவப் பணம்

இலாபநோக்கற்ற அமைப்பொன்றில் உறுப்பினர்கள் அங்கத்துவத்தைக் கொண்டிருப்பதற்காக அறவிடப்படுவது அங்கத்துவக் கட்டணமாகும்.

இலாப நோக்கமற்ற நிறுவன அமைப்புக்களின் பிரதான வருமான மூலம் அங்கத்துவப் பணமாகும். இக்கட்டண அளவும், அது பெற்றுக்கொள்ளப்படும் முறையும் இலாபநோக்கற்ற நிறுவனத்தின் அமைப்பு விதியில் (யாப்பு) காணப்படும். இவற்றில் தேவையான மாற்றங்களை பொதுக் கூட்டங்களின் போது ஏற்படுத்தலாம். இப்பணத்தை மாதாந்தமோ அல்லது வருடாந்தமோ சங்கத்தின் பொருளாளரிடம் செலுத்தி பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ள வேண்டும். சில அமைப்புக்களில் அங்கத்தவர்கள் நிரந்தர அங்கத்துவத்தைப் பெற்றக் கொள்ளும் வகையில் முழு ஆயுட் காலத்துக்குமான அங்கத்துவப் பணத்தினை ஒரே தடவையில் செலுத்துவதற்கு அங்கத்தவர்களுக்கு வசதியளிக்கப்பட்டுள்ளது. இவ் அங்கத்துவப் பணம் ஆயுட்கால அங்கத்துவப் பணம் என்றழைக்கப்படும்.

## அங்கத்துவப் பணம் கணித்தல்

கணக்குகள் தயாரிக்கப்படும் கணக்கிற்கு குறித்த காலப்பகுதிக்குரிய அங்கத்துவப் பண வருமானம் கணிக்கப்படல் வேண்டும்.

அங்கத்துவக் கட்டணம் வருடாந்தம் பெறப்படுகின்றது எனின் குறித்த ஒரு வருடத்திற்கான அங்கத்துவக் கட்டண வருமானம் பின்வருமாறு கணிக்கப்படும்.

| | | | | |
|---|---|---|---|---|
| அங்கத்துவப் பண வருமானம் | = | அங்கத்தவர் எண்ணிக்கை | x | ஒரு அங்கத்தவரின் வருடாந்த அங்கத்து வக் கட்டணம் |


உதாரணம் :- பாடுமீன் விளையாட்டுக்கழகத்தின் அங்கத்தவர் எண்ணிக்கை 130 பேர்கள் ஆகும். ஒரு அங்கத்தவரிடம் இருந்து ரூபா 200 வீதம் வருடாந்த அங்கத்துவப் பணம் அறவிடப்படும்.

வருடத்திற்கான அங்கத்துவப்பண வருமானம் = 130 x 200
= ரூபா 26 000

அட்டுறு எண்ணக்கருவிற்கமைய குறித்த காலப்பகுதிக்குரிய கிடைத்த மற்றும் கிடைக்கப்பெறாத அங்கத்துவப் பணம் அனைத்தும் அக்காலப்பகுதிக்குரிய வருமானமாகக் கொள்ளப்படும் என்பது முக்கிய விடயமாகும். பின்வரும் உதாரணத்தை அவதானியுங்கள்

உடையார்கட்டுக் கிராம நலன் புரிச் சங்கத்தின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை 655 பேர்கள் ஆகும். ஒரு அங்கத்தினருக்கான வருடாந்த அங்கத்துவப்பணம் ரூபா 150/= ஆகும். 10 அங்கத்தவர்கள் 2008ஆம் ஆண்டிற்கான அங்கத்துவப் பணத்தைச் செலுத்தவில்லை.

2008 ஆம் ஆண்டிற்கான
அங்கத்துவப் பண வருமானம் = பெற்ற பணம் + பெற வேண்டிய பணம்
= ரூபா645 x ரூபா150 + ரூபா10 x ரூபா150
= ரூபா96 750+ ரூபா 1 500
= ரூபா 98 250



### செயற்பாடு 02

இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை 150 ஆகும். ஒரு அங்கத்தவரிடம் அறவிடப்படும் வருடாந்த அங்கத்துவப் பணம் ரூபா 200 ஆகும். அங்கத்தவர்களில் 12 பேர் கணக்காண்டு கால இறுதி வரை அங்கத்துவப் பணத்தைச் செலுத்தியிருக்கவில்லை.

1. வருடத்துக்கு கிடைத்த அங்கத்துவப் பணத்தைக் கணிப்பிடுங்கள்.
2. வருடத்துக்கு மொத்த அங்கத்துவ பண வருமானம் யாது?

## 6.3 இலாப நோக்கற்ற அமைப்புக்களின் கணக்குகள்

இலாபநோக்கமற்ற நிறுவன அமைப்புக்கள் நிதியாண்டின் முடிவில் தயாரிக்கும் இரு பிரதான கணக்குகள் பின்வருமாறு.

1. கொள்ளல் கொடுத்தல் கணக்கு
2. வருமானச் செலவுக் கணக்கு

இதற்கும் மேலாக அமைப்பின் நிதி நிலைமைகளை வெளிப்படுத்துவதற்காக ஐந்தொகையும் தயாரிக்கப்படும்.

### கொள்ளல் கொடுத்தல் கணக்கு

இலாப நோக்கமற்ற நிறுவன அமைப்புக்களின் யாதேனுமொரு கணக்காண்டு காலப்பகுதிக்குரிய எல்லாப் பணப் பெறுவனவுகளினதும், எல்லாப் பணக் கொடுப்பனவுகளினதும் சுருக்கத்தைக் காட்டும் கணக்கு கொள்ளல் கொடுத்தல் கணக்கு எனப்படும்.

இது சொத்துக் கணக்கொன்றாகும். அதனால் பணப் பெறுவனவு வரவிலும், பணக் கொடுப்பனவு செலவிலும் பதியப்படும். இது காசேட்டுக்கு ஒத்த கணக்கொன்றாகும். காசேட்டில் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களும் தனித்தனியாக திகதி ஒழுங்குக்கமைய அவை நிகழ்ந்த சந்தர்ப்பத்திலேயே பதிவு செய்யப்படும். ஆனால் கொள்ளல் கொடுத்தல் கணக்கில் கணக்காண்டு களுக்கான பணப் பெறுவனவுகளின், கொடுப்பனவுகளின் தனித்தனி உருப்படி ரீதியான தொகைகள் மொத்தமாகப் பதியப்படும்.

பின்வரும் உதாரணத்தை அவதானியுங்கள்.

‘‘சக்தி விளையாட்டுக் கழகத்தின் 20xx ஆம் வருடத்துக்கான பெறுவனவு, கொடுப்பனவுகளின் சுருக்கப்பட்ட தகவல்கள் வருமாறு

| | | |
|---|---|---|
| 20xx.01.01 காசு மீதி | ரூபா. | 4 350 |
| பெற்ற அங்கத்துவப் பணம் | ரூபா. | 35 000 |
| இசை நிகழ்ச்சி வருமானம் | ரூபா. | 46 000 |
| நன்கொடைப் பெறுவனவு | ரூபா. | 25 000 |
| பழைய பத்திரிகை விற்பனை வருமானம் | ரூபா. | 900 |
| பத்திரிகை கொள்வனவு | ரூபா. | 4 000 |
| விளையாட்டு மைதான பராமரிப்புச் செலவு | ரூபா. | 5 600 |
| விளையாட்டு உபகரணம் கொள்வனவு | ரூபா. | 20 000 |
| மின்சாரச் செலவு | ரூபா. | 600 |
| எழுதுக் கருவிச் செலவு | ரூபா. | 400 |
| இசை நிகழ்ச்சிச் செலவு | ரூபா. | 34 500 |
| விளையாட்டு வீரரொருவருக்கு காசாகக் கொடுத்த நன்கொடை | | 20 000 |

இத்தகவல்களைப் பயன்படுத்தி 20xx ஆம் வருடத்திற்கான கொள்ளல் கொடுத்தல் கணக்கைப் பின்வருமாறு தயாரித்துக் கொள்ளலாம்.

**சக்தி விளையாட்டுக் கழகம்**
20xx.12.31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான
கொள்ளல் கொடுத்தல் கணக்கு

| விபரம் | தொகை ரூபா | விபரம் | தொகை ரூபா |
|---|---|---|---|
| மீ.கீ.கொ.வ (20xx.01.01) | 4 350 | பத்திரிகை | 4 000 |
| அங்கத்துவக் கட்டணம் | 35 000 | இசை நிகழ்ச்சி செலவு | 34 500 |
| இசை நிகழ்ச்சி வருமானம் | 46 000 | விளையாட்டு மைதான பராமரிப்பு | 5 600 |
| பெற்ற நன்கொடை | 25 000 | விளையாட்டு உபகரணம் | 20 000 |
| பழைய பத்திரிகை விற்பனை வருமானம் | 900 | மின்சாரக் கட்டணம் | 600 |
| | | எழுதுகருவி | 400 |
| | | வீரர்களுக்கான நன்கொடை | 20 000 |
| | | மீதி.கீ.கொ.செ (20xx.1231) | 26 150 |
| | 111 250 | | 111 250 |
| மீதி.கீ.கொ.வ (20xx.01.01) | 26 150 | | |



**செயற்பாடு 03**


கிரவுன் சிறுவர் கழகத்தின் 20xx ஜனவரி மாதத்திற்குரிய விபரங்கள் சில பொருளாளரான செல்வம் என்பவர் மூலம் தங்களுக்குத் தரப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| அங்கத்தவர்களின் எண்ணிக்கை 200 பேர்களாவர் | | |
| மாத அங்கத்துவ கட்டணம் | ரூபா | 10 |
| இரு குமிழ்முனைப் பேனாக்கள் வாங்கியது | ரூபா | 50 |
| இரு புத்தகங்கள் வாங்கியது | ரூபா | 120 |
| ஒரு பூஞ்சாடி வாங்கியது | ரூபா | 70 |
| சிறுவர் சஞ்சிகை தாள் கொள்வனவு | ரூபா | 400 |
| சஞ்சிகையைப் புத்தகமாக்கியமைக்காக கொடுத்தது | ரூபா | 300 |
| சஞ்சிகைகள் விற்பனை மூலம் பெற்ற காசு | ரூபா | 1 100 |
| வறகாபொல அகடமிக்குச் சஞ்சிகை விற்பனையின் மூலம் கிடைக்க வேண்டிய காசு | ரூபா | 300 |

சிறுவர் கழகத்தின் தலைவரான அன்ரனி தனது பணத்தினைச் செலவிட்டு சஞ்சிகைகளைத் தயாரிப்பதற்காக ரூபா 220 பெறுமதியான இரு தீந்தைப்

புட்டிகள் கொள்வனவு செய்திருந்தார். மலர், சோமன், நயிம், சந்திரிகா, நவ்சர் போன்ற அங்கத்தவர்கள் ஜனவரி 31 ஆம் திகதி வரையில் அங்கத்துவக் கட்டணம் செலுத்தவில்லை.

கிரவுன் சிறுவர் கழகத்தின் 20xx.01.31 இல் முடிவடைந்த மாதத்திற்கான கொள்ளல் கொடுத்தல் கணக்கைத் தயாரிக்கவும்



## செயற்பாடு 04

''ஜொலி போய்ஸ்'' விளையாட்டுக் கழகத்தின் பொருளாளரினால் காசுப்பெறுவனவு, கொடுப்பனவு விபரங்கள் தரப்படுகின்றன. இவைகளைக் கருத்தில் கொண்டு 20xx முதல் மூன்று மாதங்களுக்குமான கொள்ளல் கொடுத்தல் கணக்கைத் தயாரியுங்கள்.

20xx.

| | | | |
|---|---|---|---|
| தை | | | |
| 1 | ஆம் திகதி கையிலிருந்த காசு மீதி | ரூபா | 9 250 |
| 5 | குத்தகைக் கட்டணம் | ரூபா | 700 |
| 10 | அங்கத்துவப் பணம் | ரூபா | 1 200 |
| 12 | அங்கத்துவப் பணம் | ரூபா | 3 500 |
| 14 | விளையாட்டு உபகரணம் | ரூபா | 4 000 |
| 20 | அங்கத்துவப் பணம் | ரூபா | 3 300 |
| 22 | மின்கட்டணம் | ரூபா | 300 |
| 25 | மைதானப் பராமரிப்பு | ரூபா | 1 520 |
| 27 | அங்கத்துவப் பணம் | ரூபா | 3 200 |
| 30 | அங்கத்துவப் பணம் | ரூபா | 600 |
| மாசி | | | |
| 01 | இசைநிகழ்ச்சிச் செலவு | ரூபா | 3 100 |
| 02 | இசை நிகழ்ச்சிச் செலவு | ரூபா | 4 000 |
| 5 | கண்காட்சிச் செலவு | ரூபா | 1 300 |
| 0 | அங்கத்துவப் பணம் | ரூபா | 3 500 |
| 18 | விளையாட்டு உபகரணம் | ரூபா | 6 000 |
| 25 | மின் கட்டணம் | ரூபா | 750 |
| 28 | இசை நிகழ்ச்சிக்கான வருமானம் | ரூபா | 35 000 |
| பங்குனி | | | |
| 3 | நன்கொடை வருமானம் | ரூபா | 5 000 |
| 5 | பத்திரிகை கொள்வனவு | ரூபா | 1 000 |
| 8 | நலன் புரிச் செலவு | ரூபா | 3 500 |
| 15 | அங்கத்துவப் பணம் | ரூபா | 2 200 |
| 18 | நன்கொடை | ரூபா | 9 000 |
| 23 | மின்கட்டணம் | ரூபா | 800 |
| 25 | கட்டட வாடகை | ரூபா | 700 |
| 30 | அங்கத்துவப் பணம் | ரூபா | 2 000 |


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## வருமானச் செலவுக் கணக்கு

இலாப நோக்கற்ற நிறுவன அமைப்புக்களினால் குறித்தவொரு கணக்கீட்டுக் காலப்பகுதியில் இடம்பெற்ற செயற்பாட்டுப் பெறுபேற்றைக் கணிப்பீடு செய்வதற்காக தயாரிக்கப்படும் கணக்கு வருமானச் செலவுக் கணக்கு எனப்படும்.

இது இலாப நோக்குடைய நிறுவனங்களினால் தயாரிக்கப்படும் இலாப நட்டக் கணக்கை பெரும்பாலும் ஒத்ததாகும். எனவே இலாப நட்டக் கணக்கின் போது பின்பற்றப்படும் கணக்கீட்டு விதிமுறைகள் இக் கணக்குத் தயாரிப்பின் போதும் பின்பற்றப்படவேண்டும். வருமானச் செலவுக் கணக்கின் இறுதி விளைவு மேலதிகம் அல்லது பற்றாக்குறை எனும் பெயரில் அழைக்கப்படும். இங்கு மேலதிகம் என்பது செலவிலும் கூடிய வருமானத்தையும் பற்றாக்குறை என்பது வருமானத்திலும் கூடிய செலவையும் குறிக்கின்றது. மேலதிகம் அல்லது பற்றாக்குறை நிறுவனத்தின் திரண்ட நிதிக்கு மாற்றப்படும்.

திரண்ட நிதி என்பது பல்வேறு மூலங்களிலிருந்து திரட்டி உருவாக்கப்பட்ட நிதியாகும். இலாப நோக்கற்ற அமைப்புக்களின் வருமானத்தில் இருந்து செலவுகளை நீக்கிய பின் மீதியாக உள்ள மேலதிக தொகை, நன்கொடைகள், ஆயுள்சந்தா என்பன திரண்ட நிதியில் உள்ளடக்கப்படும். பற்றாக்குறை ஏற்படும் பொழுது திரண்ட நிதி குறைவடையும். மாறாக மேலதிகம் திரண்ட நிதியை அதிகரிகும். திரண்ட நிதி, அமைப்பின் நிதிப்பலத்தை வெளிக்காட்டும். இலாப நோக்கற்ற அமைப்புக்களின் குறிக்கோள்களுக்கு அமைய அவற்றின் வருமான, செலவு மூலங்களின் தன்மையில் வேறுபாடுகள் காணப்பட முடியும். கீழ் காட்டிய உதாரணங்களை அவதானியுங்கள்.

- மரண நலன்புரிச்சங்கம் - மரண நடவடிக்கைகளுக்காக ஏற்படும் செலவுகள்
- பாடசாலை பழைய மாணவர் சங்கம் :- தமது பாடசாலை வளர்ச்சி கருதி ஏற்படும் செலவுகள்
- விளையாட்டுக் கழகங்கள் :- விளையாட்டுத் திறன்களை ஏற்படுத்தும் பொருட்டு மேற்கொள்ளப்படும் செலவுகள்

பின்வரும் உதாரணத்தின் மூலம் வருமானச் செலவு கணக்கொன்றைத் தயாரிக்கும் முறை தொடர்பான அறிவைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் பொருளாளரினால் 31.12.20xx இல் முடிவுற்ற ஆண்டுக்கான தகவல்கள் தரப்படுகின்றன.

| | |
|---|---|
| அங்கத்துவப் பணம் | ரூபா 5 600 |
| நன்கொடை கிடைத்தது | ரூபா 9 000 |
| உபசரணைச் செலவு | ரூபா 6 000 |
| பல்வேறு தர்மச் செலவு | ரூபா 4 500 |
| மின் கட்டணம் | ரூபா 1 200 |
| பத்திரிகைக் கொள்வனவு | ரூபா 2 000 |
| பழைய பத்திரிகை விற்பனை | ரூபா 160 |
| வழங்கிய நன்கொடை | ரூபா 2 000 |

கீழே காட்டப்பட்டுள்ள தகவல்களையும் கருத்தில் கொண்டு 20xx.12.31 முடிவடைந்த வருடத்திற்கான வருமானச் செலவுக் கணக்கு தயாரிக்கும் முறையை நோக்குவோம்.

1. குறித்த வருடத்திற்கான இன்னும் பெற வேண்டிய அங்கத்துவப் பணம் ரூபா 2 100
2. 31.12.20xx செலுத்த வேண்டிய மின்சாரக் கட்டணம் ரூபா 300

**இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்தின்**
**31.12.20xx இல் முடிவுற்ற நிதியாண்டிற்கான**
**வருமானச் செலவுக் கணக்கு**

| விபரம் | தொகை ரூபா | விபரம் | தொகை ரூபா |
|---|---|---|---|
| உபசரணைச் செலவு | 6 000 | அங்கத்துவக் கட்டணம் | 7 700 |
| தர்மச் செலவு | 4 500 | நன்கொடை | 9 000 |
| மின் கட்டணம் | 1 500 | பழைய பத்திரிகை | |
| பத்திரிகை | 2 000 | விற்பனை | 160 |
| நன்கொடை வழங்கியது | 2 000 | | |
| செலவிலும் கூடிய வருமானம் (திரண்ட நிதிக்கு செலவு வைக்கப்பட்டுள்ளது) | 860 | | |
| | 16 860 | | 16 860 |



செயற்பாடு 05

கீழே தரப்படுவது ''சக்தி'' விளையாட்டுக் கழகத்தின் 31.12.20xx இல் முடிவுற்ற ஆண்டுக்கான கொள்ளல் கொடுத்தல் கணக்காகும்.


**31.12.20xx இல் முடிவுற்ற ஆண்டுக்கான கொள்ளல் கொடுத்தல் கணக்கு.**

| விபரம் | தொகை | விபரம் | தொகை |
|---|---|---|---|
| 01.01.20xx இல் மீதி | 19 800 | பொருட்காட்சி | 11 250 |
| அங்கத்துவப் பணம் | 24 200 | பத்திரிகை | 2 000 |
| | | வருடாந்த புலமைப் பரிசில் | 10 000 |
| விளையாட்டு நிகழ்ச்சி | | கட்டட வாடகை | 4 000 |
| மூலம் பெறப்பட்டது | 16 000 | மைதானப் பராமரிப்பு | 3 000 |
| நன்கொடைகள் மூலம் | 4 000 | விளையாட்டு நிர்வாகியின் | |
| | | சம்பளம் | 12 000 |
| | | மின்சாரக் கட்டணம் | 700 |
| | | தொலைபேசி | 1 300 |
| | | விளையாட்டு உபகரணம் | 5 000 |
| | | மீதி.கீ.கொ.செ. | 14 750 |
| | 64 000 | | 64 000 |
| மீதி.கீ.கொ.வ | 14 750 | | |



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

இத்தகவல்களிலிருந்து
31.12.20xx இல் முடிவுற்ற ஆண்டுக்கான சக்தி விளையாட்டுக் கழகத்தின் வருமானச் செலவுக் கணக்கைத் தயாரிக்குக.



## செயற்பாடு 06

கிறீன்லையின் வாசிப்புக் கழகத்தின் செயலாளரினால் 20xx. வருடத்திற்குரிய பின்வரும் தகவல்கள் தரப்படுகின்றன.


வாசிப்பு கழகத்தின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை 200 பேர்களாவர். வருட அங்கத்தவர் கட்டணம் தலா ரூபா 100 ஆக இருப்பதுடன் குறித்த வருடத்தில் 20xx.12.31 வரையில் கிடைக்கப்பெறாத அங்கத்தவர் கட்டணம் ரூபா 1500. அத்தோடு பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெற்றன.

**காசு பெறுவனவுகள்**
நூல் தாமதக் கட்டணம் ரூபா 530
உற்சவ வருமானம் ரூபா 4,800

**காசுக் கொடுப்பனவுகள்**

| | | |
|---|---|---|
| | ஊழியர் சம்பளம் | ரூபா 15 000 |
| | மின்சாரக் கட்டணம் | ரூபா 3 200 |
| | நீர்க் கட்டணம் | ரூபா 600 |
| | மின்குமிழ் | ரூபா 3 100 |
| 20xx.01.01 ஆம் திகதியில் | காசு மீதி | ரூபா 500 |
| | கட்டடம் | ரூபா 20 000 |
| 20xx.12.31 ஆம் திகதியில் | காசு மீதி | ரூபா 4 700 |
| | கட்டடம் | ரூபா 18 000 |

உங்களை மேற்காட்டிய வாசிப்புக் கழகத்தின் பொருளாளராகக் கருதிக் கொண்டு 20xx.12.31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்குரிய
1. கொள்ளல் கொடுத்தல் கணக்கு
2. வருமான செலவுக் கணக்கு என்பவற்றைத் தயாரிக்கவும்.



## செயற்பாடு 07

i) நலனோம்புச் சங்கங்கள் மூலம் மக்களுக்கு வழங்கக்கூடிய சேவைகளைப் பட்டியல்படுத்துக.

ii) நலனோம்புச் சங்கங்களின் பண்புகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுங்கள்.